DEPOSITION OF WITNESS

IN THE COURT OF II ADDL.DISTRICT & SESSIONS JUDGE, THOOTHUKUDI.

Case No. O.S.No 150/2023

Prosecution witness for P.W.1

| | | | |
|---|---|---|---|
| Name | ... திரு. ராமன் யாதவ் | Caste | ... |
| Father's/ Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | ... |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **13.02.2024.**

**முதல் விசாரணை**

நான் வழக்கில் வாதியாவேன். பிரமாணவாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதை படித்து பார்த்து கையெழுத்து செய்துள்ளேன். அதில் உள்ள விவரங்கள் நான் அறிந்தவகையில் உண்மையானவை. 10.04.2008 தேதியில் தபசில் சொத்தின் கீழ்புரம் உள்ள இடத்தை நான் எனது மகள் கோமதி அம்மாள் என்பவருக்கு எழுதிக்கொடுத்துள்ள செட்டில்மெண்ட் ஆவணத்தின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ–1, 15.04.2008 தேதியில் தபசில் சொத்தை பொறுத்து சந்தனமாரிக்கு எழுதிக்கொடுத்துள்ள பதிவு செய்யப்பட்ட அடமானம் இரத்து செய்யப்பட்ட ஆவணத்தின் சான்றிட்ட நகல் ஆவணம் தாக்கல் செய்கிறேன் அது வா.சா.ஆ–2, 13.04.2022 அன்று வா.சா.ஆ–2 அடமான கடனை இரத்து செய்தது தொடர்பான எழுதப்பட்ட பணப்பற்று ரசீது வா.சா.ஆ–3, 28.04.1992 தேதியிட்டு தபசில் சொத்தை பொறுத்து என் பெயரில் உள்ள நத்தம் அடங்கல் வா.சா.ஆ–4, 20.09.2023 தேதியிட்டு தபசில் சொத்தை பொறுத்த புல வரைபடத்தின் நகல் வா.சா.ஆ–5, 04.05.2015 தேதியில் பிராது தபசில் சொத்தை பொறுத்து பிரதிவாதி பெயரை மோசடியாக சேர்த்து ஏற்படுத்தப்பட்டுள்ள நத்தம் அடங்கல் நகல் வா.சா.ஆ–6 பிராதுப்படி உத்தரவாக வேண்டும்.